1972 நவம்பர் 14]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) 40,575 அம்பர் இராட்டைகள் தயாரிக்கப்பட்டன அல்லது வாங்கப்பட்டன. இவற்றுள், 3,945 இராட்டைகள் தற்போது பயன்பட்டு வருகின்றன.

(இ) அம்பர் இராட்டைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மொத்தச் செலவு ரூ. 58.26 இலட்சம் ஆகியுள்ளது.

Thanjavur Co-operative Marketing Federation, Tiruvarur

* 304 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have superseded the Thanjavur Co-operative Marketing Federation, Tiruvarur; and

(*b*) if so, the reasons therefor?

திருவாரூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவாரூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பினை அது செயற்படுவதிலிருந்து அரசு தள்ளி வைத்துவிட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) செயற்குழு ஒழுங்காக நடைபெறவில்லை என்று கூட்டுறவுத் துறைப் பதிவாளர் கருதியதால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு கூட்டமைப்பில் ஒழுங்கீனம் காரணமாக நஷ்டமேற்பட்டிருப்பதாக அரசு அறிந்து அதன் காரணமாக இந்தக் கூட்டமைப்பு செயல்படுவதிலிருந்து தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, செயற்குழு ஒழுங்காக நடைபெறவில்லை, அதற்கு வாய்ப்பில்லை என்று கருதியதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. செயற்குழு கலைக்கப்பட்டது. அது ஒழுங்கீனமாகவும் ஒழுங்கில்லாமலும் இருந்ததற்கு உடனடியான காரணம் என்னவென்றால், அதிலே இருந்த எட்டு இயக்குநர்கள் பதவியிலிருந்து ராசினாமாச் செய்தார்கள். 'கோரம்' இல்லை. ஆகவே அதுவே போதுமான காரணம் என்று கருதி, அந்தக் கூட்டமைப்பு 'சூபர்சீட்' செய்யப்பட்டது.

[1972 நவம்பர் 14

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, மேற்கொண்டு விசாரணை செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, விசாரணை நடந்துகொண்டிருக்கிறது.

Survey on Farm Equipment

* 305 Q.—THIRU V. ISVARMURTI :
THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Indian Society of Agricultural Engineers has undertaken any survey into investment of Farm Equipment in this State; and

(b) if so, the details thereof?

பண்ணை சாதனங்கள் குறித்து ஆய்வு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்திய வேளாண்மைப் பொறியாளர்கள் சங்கம், இம்மாநிலத்தில் பண்ணை சாதனங்கள் குறித்து முதலீடு செய்வது தொடர்பாக ஆய்வு ஏதேனும் மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

Workers' Co-operative Stores

* 306 Q.—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal with the Government for opening Workers' Co-operative Stores in factories with a strength of more than 200 workers; and

(b) if so, the steps taken thereon by the Government?